Registered as a NewsPaper in Ceylon ★ விலை: சதம் 15

மில்க்வைற் சோப்
பாவிப்போளர்களுக்கு ஓர் அன்பான
**வேண்டுகோள்**

மில்க்வைற் தயாரிப்புகளை உங்கள் வாடிக்கைக் கடைகளில் வாங்கும் பொழுது அவற்றின் மேலுறைகளைக் கவனித்து மேலுறைகளுடனே கேட்டுவாங்குங்கள். மேலுறைகளைச் சேகரித்து மில்க்வைற் வியாபார வான்களில் அல்லது மில்க்வைற் காரியாலயத்தில் அல்லது தபாலில் அனுப்பி பரிசுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அதிபர்
மில்க்வைற் சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily

தேசிய தினசரி

தபால் பெட்டி எண். 49 போன்: 389

மில்க்வைற் சோப்
விற்பனையாளர்களுக்கு ஓர் அன்பான
**வேண்டுகோள்**

மில்க்வைற் சோப் பாவனையாளர்களின் எமது பரிசுத்திட்டத்தில் அதிக ஆர்வத்துடன் பங்குபற்றவேண்டியிருப்பதால் தயவுசெய்து உங்கள் வாடிக்கையாளர்களுக்கு மில்க்வைற் சோப் விற்பனைசெய்யும் பொழுது அவற்றின் மேலுறைகளுடன் விற்பனை செய்யுமாறு மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அதிபர்
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

மலர் 13 புரட்டாதி 16 ஷஃபான் 11 (2—10—71) சனிக்கிழமை இதழ் 233

# உலகிலேயே அதிகம் கடன் பட்ட நாடு இலங்கைதான்!

## சுகாதார அமைச்சர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், சனி

"எவர் ஆட்சிப்பீடத்திலிருந்தாலும் நாட்டின் நலனைக் கருதியும் நாட்டின் சுபீட்சத்துக்காகவும் எந்த அபிவிருத்தித்திட்டத்தைக் கொண்டுவர முனைந்தாலும் நாம் அவற்றைச் செயல்படுத்தக் கூடிய வாய்ப்புக் கிடைத்ததும் அவற்றை நிச்சயம் செயல்படுத்துவோம். ஆட்சிபீடத்திலமர்வாய்ப்புப் பெற்றவர்களுக்கிடையிலோ அரசியல் கட்சிகளுக்கிடையிலோ கொள்கையில் வேறுபாடு இருப்பினும் நாட்டின் நலன் கருதிக்கொண்டு வந்த திட்டங்களை நாம் செயல்படுத்துவோம். இதற்கு தெல்லிப்பழையில் இன்று திறந்துவைக்கப்படும் புதிய ஆஸ்பத்திரியே போதிய சான்றாகும்".

இவ்வாறு சுகாதார அமைச்சர் டபிள்யூ.பி.ஜி. ஆரியதாசா தெல்லிப்பழையில் நேற்று முன்தினம் புதிய ஆஸ்பத்திரியைத் திறந்து வைத்தபின் ஆஸ்பத்திரிக்கு முன்பாக நடந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழைக் கிராம சபைத் தலைவர் திரு எம். சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சர் ஆரியதாசா மேலும் கூறியதாவது:

சுகாதார அமைச்சராகப் பதவி பெற்ற ஒருவருட காலத்துக்குள் நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள ஆஸ்பத்திரிகளுக்குஞ்சென்று அங்குள்ள பிரச்னைகளை ஆராய்ந்து அறிந்துள்ளேன். ஆனால் அப்பகுதி மக்களைப் பற்றியோ அப்பகுதிகளைப் பற்றியோ நான் அறிய முடியவில்லை சமீபத்தில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தபோது அங்குள்ள ஆஸ்பத்திரியின் நிலைமைபற்றியும் சுகாதார நிலைமைபற்றியும் அப்பகுதி ஆட்சிமன்றப் பிரதிநிதிகள் மூலம்தெரிந்துகொண்டேன்.

இங்கும் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் நிலைமைபற்றி ஆஸ்பத்திரி ஆலோசனைக் குழு மூலம்தெரிந்துகொண்டேன். ஆஸ்பத்திரியின் தேவைகளை

(5-ம் பக்கம் பார்க்க)

## பொருளாதார சுபீட்சத்துக்கு ஐந்துவருடத் திட்டம்
### —ரி. பி. சுபசிங்க

கொழும்பு, வெள்ளி

"நாட்டின் பொருளாதார நெருக்கடியைப்போக்கதீவிர பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு மக்கள் அரசாங்கத்துக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்"

கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சர் திரு ரி. பி. சுபசிங்க, இலங்கைவர்த்தக "சேம்பர்" மண்டபத்தில் வர்த்தகர்கள் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"அரசாங்கம் விவசாய, கைத்தொழில் துறைகளில் பெரும் முன்னேற்றம்காண 5 வருடத் திட்டமொன்றை தயாரித்துள்ளது. விவசாயத் துறையில் கிராமங்களில் காணிசீர்திருத்தம் கொண்டுவருவதன்மூலம் மாற்றங்கள் ஏற்படவுள்ளன. தோட்டப் பகுதிகளிலுள்ள பயனற்ற



நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு விவசாயிகளுக்குவழங்கப்படவுள்ளன.

இதேபோன்று கைத்தொழில் துறையிலும் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளன. உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி புதிய கைத்தொழில்களை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவற்றையெல்லாம் நன்றாகச் செயல்படுத்தி சோஷலிஸ இலக்கை அடைந்து பொருளாதார சுதந்திரத்தைப்பெற நாடுபூராவும் அரசுக்கு பூரண ஒத்துழைப்பு நல்கவேண்டும்' எனக் கூறினார்.

'திட்டமிட்டுச் செயலாற்றினால்

# பத்தே ஆண்டுகளில் வடக்கில் பொருள்வளம் கொழிக்கும்'

## வட்டுக்கோட்டை எம்.பி. கருத்து

யாழ்ப்பாணம், சனி

"கடந்த 70ம் ஆண்டு மே மாதம் நம்நாட்டு அரசியலில் பெரும் மாற்றம் நிகழ்ந்தது. இதன் கருத்தையும், விளைவையும் அதனால் தமிழ் மக்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்பதையும் தமிழ்த் தலைவர்களும் சமூகத் தொண்டர்களும் ஆராய்ந்தறிந்து ஒருமுகமாகத் தமிழ் மக்களுக்கு வருங்காலத்தில் ஈடேற்றத்தைக் கொடுக்கவேண்டும். வருங்காலத்தில் முன்னேறிச் செல்லும் சமுதாயங்களை எட்டிப்பிடிக்கும் வல்லமை ஏற்படவேண்டுமானால் கடந்த காலத்தில் நாம் கையாண்ட முறைகளை மாற்றி புதிய வழியில் அர்த்தப்படுத்தி நடத்தல் வேண்டும் இதுவே தமிழ் மக்கள் முதற்கண் சிந்திக்க வேண்டிய விஷயம். அன்றேல் எமக்கு மீட்சி இல்லை."

மேற்கண்டவாறு வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா காரைநகர் வைபவமொன்றில் தெரிவித்தார்.

காரைநகர் யாழ்டன் கல்லூரி அதிபராயிருந்து மறைந்துபோன திரு. வே. சிவராசாவின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட மண்டபத் திறப்புவிழாவில் நேற்றுப் பேசுகையிலேயே திரு. தியாகராசா எம்.பி. இவ்வாறு சொன்னார். மண்டபத்தைத் திறந்துவைத்தும் அமரர் திரு. சிவராசாவின் நிழற்படத்தைத் திறந்து வைத்தும் எம். பி. உரையாற்றினார். கல்லூரியின் தற்போதைய அதிபர் திரு. எஸ். வேலுப்பிள்ளை தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

அமரர் சிவராசாவின் குணப்பண்புகளையும் சிறப்பியல்புகளையும் புகழ்ந்து பேசிய எம். பி. தொடர்ந்து தமது உரையில் கூறியதாவது:

### எமது பிரதேசமும் வளமும்

பொருளாதார பலமின்றி எந்த சமூகமும் தனது குறைகளைத் தீர்த்து உரிமைகளைப் பெற்று வாழ்ந்ததாகச் சரித்திரமில்லை. ஒரு நாளும் ஒரு சமூகமும் நிறைவுற்று இருந்ததும் இல்லை. எப்பொழுதும் உரிமைகளுடன் சிறப்பாகவே வாழவேண்டும் என்பதே அவரவர் விருப்பம். ஆனால் நாம் பொருளாதாரத்தில் மற்றவர்களில் தங்கி அவர்களுடைய சலுகையை எதிர்பார்க்கும் வரை தாமாகவே உரிமைகளைப்பெற்றே வாழமுடியாது. இது யாரும் அறிந்தஉண்மையே. எனவே நாம் நமது பிரதேசத்தில் எமது நீர்வள, நிலவளங்களைப் பெருக்கி, பொருளாதாரத்தில் தனித்தியங்கக் கூடிய சக்தியைப் பெற வேண்டியது மிக அவசியமாகும்.

கடவுள் உலகத்தில் ஒருவரையும் அநாதைகளாக விடவில்லை. இயற்கை பல்வேறு அமைப்புடையது அவ்வப் பகுதியில் அவ்வச் சூழல்களுக்கேற்பவும் நவீன விஞ்ஞானம் கொடுத்திருக்கும் வசதிகளுக்கேற்பவும் அந்தம் பிரதேசங்களை மனிதருக்கு ஆதாரமாக ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். வெளிப்பார்வைக்கு நம் பிரதேசம் வரட்சி உடையது போலத் தோற்றப்படும். ஆனால், விஞ்ஞான ரீதியாகவும் தற்காலப் பொருளாதார ரீதியாகவும் எம் பிரதேசம் அளவற்ற பொருள் ஈட்டக்கூடியதாக இருக்கின்றது. முறையாகநாம் திட்டமிட்டுச் செயலாற்றினால் எமது மக்கள் பொருள்தேடப் பிற இடங்களுக்குச் செல்லாமல் மற்றவர்கள் எம்பிர[illegible]

([illegible] பார்க்க)

## யுவதியை கடத்தினாராம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பதினைந்து வயது யுவதி ஒருவரை வடபகுதியிலுள்ள கிராமசபையொன்றின் ஓர் அங்கத்தவர் கடத்திச் சென்றுவிட்டதாகவும் யுவதியுடன் நகைகளையும் கொண்டுசென்றுவிட்டதாகவும் பெண்ணின் பெற்றோர்கள் பொலிசில் புகார்செய்துள்ளனர். இதுபற்றி கோப்பாய் பொலிசார் தீவிரவிசாரணைசெய்து வருகின்றனர்.

## கூப்பன் யாருடையது?

இணுவிலைச் சேர்ந்த செல்லப்பா - இராசேந்திரம் என்பவரால் முனீஸ்வரன் வீதியிலிருந்து ஒரு புதுக்கூப்பன் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

# இலங்கையில் அம்மை முற்றாகஒழிந்துவிட்டது!

## உலக சுகாதார நிறுவன ஆசியக் கிளை தகவல்

ரங்கூன் ஒக் 1

இலங்கையில் அம்மை நோய் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டது. மலேரியா நோயும் விரைவில் ஒழிக்கப்பட்டுவிடும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறது உலக சுகாதார ஆசிய பிராந்தியக் கிளை. ரங்கூனில் நடந்த ஆசிய பிராந்தியக் கிளையின் மாநாட்டில் கிளையின் செயலாளரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆசியாவில் அம்மைநோய் ஓரளவு ஒழிக்கப்பட்டுவிட்டதென்றும், மலேரியாநோய் படிப்படியாக ஒழிக்கப்பட்டு விடுமென்றும் உலக சுகாதார நிறுவனத்தின் கிளை தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி 95. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3625

### விற்பனைக்கு

E N B.S.A. பன்ரம் (Bantem) Major 150 CC சுவிம் ஆம் 1ஸ்ரீ மொடெல் 4 வது பாவனையாளர் பாவும் நல்ல நிலையில். தொடர்பு கொள்ளவும். ரஞ்சிற் குலதுங்க, மதிய மின்சார நிலையம், சுன்னாகம். 3630

ராதா மின்சார மருந்து தலைவலி, ஜலதோஷம் வாய்வுப்பிடிப்புகள், தேசவுகள் சுளுக்குவாதம் மற்றும் அனேக நோய்களுக்கு உபயோகமான சிறந்த மருந்து. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 3624

### தேவை

பனை தென்னந் தோட்டத்தில் குடும்பத்தோடு வசித்து தொழில் செய்ய கணக்கன்மார், கமக்காணிகள், காவல் குடும்பங்கள், ராக்டர் சாரதிகள்- தென்னந் தோட்ட வேலையில் அநுபவமுள்ளவர்கள் அதற்கான சான்றுப் பத்திரங்களுடன் உடன் விண்ணப்பிக்க விபரங்கள் மேற்பார்வையாளர், உலாந்தாக் காடுத் தோட்டம், பனை என்னும் விலாசத்தில் அறிந்து கொள்ளலாம். 3628

### தேவை

கணக்கு எழுதுவதில் நன்கு அனுபவமுள்ள கணக்கப்பிள்ளை உடனே தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். ஆ.ச. சவரப்பிள்ளை அன் பிரதர், 166 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3631

ஸ்ருடியோவேலை சகலதும் தெரிந்த ஒருவரும் டாக்றூம் வேலை செய்யக் கூடிய ஒருவரும், வேலைபழகுவதற்கு 15 வயதிற்கு மேற்பட்ட பையன்களும் உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். சித்திராலயா, 18, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 3627

### ஸ்கந்தவரோதயக் கல்லூரி கன்னாகம்

## பிரவேசம்—1972

9 ஆம், 11 ஆம் தரங்களில் சில வெற்றிடங்கள் உண்டு. 9 ஆம் தரத்துக்கு 1-1-57-க்குப் பின்னரும், 11 ஆம் தரத்துக்கு 1-1-54-க்குப் பின்னரும் பிறந்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் முடிவடையும் திகதி 7-10-71. பிரவேசப் பரீட்சை நடைபெறும் தினம் 23-10-71.

அதிபர்

30-9-71 3054

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## கேள்விப் பத்திரம்

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 6800 சாக்குகள் விற்பனைக்குண்டு. அதற்கான கேள்விப்பத்திரங்கள் 10-10-71க்கு முன் பதிவுத் தபால்கள் மூலம் அனுப்பப்படவேண்டும். இதற்கான படிவங்களை ரூபா 20/-கட்டி பொதுமுகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்
பருத்தித்துறை
ப. நோ. கூ. சங்கம்
பருத்தித்துறை
3056

## இடமாற்றம்

சுன்னாகம், வெள்ளி

சுன்னாகம் சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய திரு. பரமதிங்கராஜா கோப்பாய் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். இதனை முன்னிட்டு இக்கல்லூரி ஆசிரியர்களால் ஒரு பிரிவுபசார வைபவமும், அன்பளிப்பும் நடாத்தப்பட்டது.

## கேள்வி விண்ணப்பம்

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பல அளவுகளிலான வெற்றுச் சாக்குகளும் பெரிய றம்களும் விற்பனைக்குண்டு. கேள்வி முடிவு திகதி 14-10-71.

ஆர். புஸ்பராசா
உப-தலைவர்

பூநகரி பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,
பூநகரி

1-10-71 3055

## அறிவித்தல்

கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் எட்டாவது சைவ மாநாடு, 10-வது ஆண்டுவிழா என்பவற்றை முன்னிட்டு நடைபெறவிருக்கும் சைவசமய சம்பந்தமான நடனம், நாடகப் போட்டிகளுக்குரிய விண்ணப்பங்கள் 15-10-71-க்கு முன்னர் திரு. இ. செல்லையா J. P. கைதடி வடக்கு, கைதடி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். நாடகம் 30 நிமிடம், நடனம் 15 நிமிடம் கொண்டதாக அமைதல் வேண்டும். ஆ. கந்தையா, பொதுச் செயலாளர். 3632

## நல்லையில் பாரதிவிழா

### 4-ம் நாள் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், சனி

இன்றைய நிகழ்ச்சிகள் திரு. எஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறும். திரு. செ. தனபாலசிங்கம், வித்துவான் சி. ஆறுமுகம் ஆகியோரின் சொற்பொழிவும், மதுரகவி இ. நாகராஜன் தலைமையில் கவிஞர்கள் வி. கந்தவனம், காரை செ. சுந்தரம்பிள்ளை, வே. ஐயாத்துரை, வே. குமாரசாமி, வை. க. கயிலாசநாதன் ஆகியோரின் கவியரங்கு நடைபெறும். அதையடுத்து சங்கீதவித்துவான் ஏ. கே. கருணாகரனின் இன்னிசை விருந்து இடம்பெறும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி (2-10-71)

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-00 அதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை 8-00 இசை வேளை, 8-15 இசைச்சித்திரம் பாடல்கள்.

6-10 இடைவேளை இசை, 6-15 மாணவர் மன்றம், 6-30 சாந்தி கதை, 7-00 வடை அணி இசை, 7-30 வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9 30 நாடகம், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு

## நாடக நடனப் போட்டி

யாழ்ப்பாணம், சனி

கைதடி இந்துவாலிபர் சங்கம் கொண்டாடவிருக்கும் 8-வது சைவ மகாநாட்டை ஒட்டி நாடக நடனப் போட்டிகளை நடத்தவிருக்கிறது. இவை சைவசமய அடிப்படையில் அமைந்திருப்பதோடு நாடகம் 30 நிமிடமும், நடனம் 15 நிமிடமும் உடையதாக அமைய வேண்டுமென அதன் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், சனி

கோண்டாவில் சி. சி. தமிழ்க்கலவன் பாடசாலையில் உதவியாசிரியர்களாகக் கடமையாற்றி நல்லூர் சி. சி. தமிழ்கலவன் பாடசாலைக்கு இடமாற்றலாகிச் செல்லும் திரு சதாசிவம், திரு கந்தசாமி ஆகியோருக்கு இப் பாடசாலை ஆசிரியர்களால் பிரிவுபசாரம் வழங்கப்பட்டது. ஆசிரியர்கள் திரு நடராசா, திரு முத்துலிங்கம் திருமதி சுசைலாயதா தன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.


## பிறந்ததின கருத்தரங்கு

சுன்னாகம், சனி

மகாத்மா காந்தி பிறந்த தினத்தையொட்டி இன்று மாலை சுன்னாகம் சுட்டின நூல் நிலைய மண்டபத்தில் அபிவிருத்தித்திட்ட கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதில் வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா கலந்து கொள்வார். மரம் நாட்டுவிழாவும் இடம்பெறவுள்ளது.


ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்,
ஜெய்சங்கர் — விஜயலலிதா
நடித்த
நூற்றுக்கு நூறு

மகத்தான 3வது வாரம்
லிடோ [யாழ்நகர்]
(காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30)
கிங்ஸ்லி (கொழும்பு) திரைகளில்
தபால்காரன் தங்கை

ஜெமினி—வாணிஸ்ரீ — முத்துராமன்
மற்றும் பலர் நடித்தது

வெற்றிகரமான 7வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00
தெய்வ மகன்

சிவாஜி
[3 மாறுபட்ட வேடங்களில்]
ஜெயலலிதா
நம்பியார் — நாகேஷ்
சுந்தரராஜன்
நடித்தது.

வெலிங்டன் சினிமா
மானிப்பாய்
தினசரி
பி. ப. 2-30, 6-30, 10-00
எம்.ஜி.ஆர் -சரோஜாதேவி
நடித்த
நீதிக்குப்பின் பாசம்

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி: 4 30 மட்டும்
சனி, ஞாயிறு 10-30
WOMAN OF STRAW


தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி-நிர்மலா
நடித்த
பூவா? தலையா??

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Sat. Sonday 10-30
Jack Palance
Vince Edward
in
THE DESPERADOS
(colour)

தினசரி 2-00, 10-00
எம்ஜிஆர்- சரோஜாதேவி
நாகேஷ்
நடித்த
ஆசைமுகம்

MANOHARA
Jaffna
Daily 4-45, 7&9-45 p.m.
Sat, Sundays 10-30
Robert Stack
Bidi Anderson
in
STORY OF A WOMAN
(adults only)

RAJAH (Jaffna)
Daily 10-30, 4-45
7-00 & 9-45
Alan Ladd
in
SHANE
(for adults-color)


வின்ஸர்
யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன்
சௌகார்ஜானகி
(இரு வேடங்களில்)
ரவிச்சந்திரன்
எம். ஆர். ஆர். வாசு
வி. எஸ். ராகவன்
பேபி ராணி
நடித்த
காவியத் தலைவி
கதை-வசனம்-டைரக்ஷன்: ... பாலசந்தர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சூயஸ் கால்வாய் திறக்க இருநாடுகளும் பேசவேண்டும்

## இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் கருத்து

டெல்அவிவ், ஒக் 1

சூயஸ்கால்வாய் பிரச்னை தீர எகிப்து வெளிநாட்டமைச்சரும் இஸ்ரேல் வெளிநாட்டமைச்சரும் கூடிப் பேசவேண்டும் என இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் திரு எபா இபான் கருத்துத்தெரிவித்துள்ளார்.

சூயஸ்கால்வாயை விரைவில் திறப்பதுபற்றி ஒரு முடிவுக்கு வர எகிப்திய வெளிநாட்டமைச்சர் திரு முகமத் றியாத்துடன் உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் திரு இபான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- சூயஸ்கால்வாய்ப் பிரச்னைக்கு ஒரு முடிவு காணவேண்டியது மிகவும் அவசியமாகும். இதுபற்றி சம்பந்தப்பட்ட இருநாடுகளும் கலந்துபேச வேண்டும்.

சூயஸ்கால்வாய் திறந்துவிடுவது பற்றியும் மேற்காசியாவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவும் மேற்காசிய சமாதானத் தூதுவர் டாக்டர் குனார் ஜாரிங் முயற்சிசெய்ததும் அம்முயற்சி கடந்த பெப்ரவரிக்குப் பின்கைவிடப்பட்டிருந்ததும் தெரிந்ததே.

இவ்விஷயமாக சிலநாட்களின்முன் பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் திரு சேர். அலக்ஸ் டக்ளஸ் ஹியூம், எகிப்திய வெளிநாட்டமைச்சர் திரு றியாட்டுடனும் ஐநூதிபதி அன்வர் சதாத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

மேற்காசிய பிரச்னைபற்றி ஐ. நாவில் முழு அளவில் ஆராயப்பட வேண்டுமென அரபுநாடுகளும் மற்றும் சிலநாடுகளும் வலியுறுத்திவருவதை அடுத்தே இப்பொழுது இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்

# ஆந்திர அமைச்சரவை பதவி ஏற்றது

## ஆனால் தெலுங்கானு பிரிவினர் பதவியேற்கவில்லை

ஹைதராபாத், ஒக். 1

ஆந்திரமாநிலத்தின் புதிய மந்திரிசபை இன்று பதவி ஏற்றுள்ளது. 14 அமைச்சர்களைக்கொண்ட மந்திரிசபையில் 12 அமைச்சர்களே சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். சத்தியப்பிரமாணம் செய்துகொள்ள சமூகமளிக்காத இரு அமைச்சர்களும், தெலுங்கானு சமிதியைச் சேர்ந்தவர்கள்.

இந்த இருஅமைச்சர்களும் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவராததற்கான காரணத்தை தாம் அறிந்துகொள்ளப்போவதாக முதலமைச்சர் திரு. பி வி நரசிம்மராவ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கட்சி வேறுபாடுகள், வேற்றுமை மனப்பான்மைகள் போன்ற தன்மைகளை தான் சகித்துக்கொள்ளப் போவதில்லை என்றும், நாட்டிலுள்ள எல்லாப் பகுதியினரும் திருப்தியடையக்கூடிய வகையில்தான் ஆட்சிசெய்யப்போவதாகவும் தெரிவித்தார்.

தெலுங்கானு சமிதியைச் சேர்ந்த இரு அமைச்சர்கள் ஏன் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவில்லை என்று தெலுங்கானு சமிதி தலைவரை நிருபர் ஒருவர் கேட்டபொழுது, தெலுங்கானு விஷயத்தில் இன்னும் சில பிரச்னைகள் பற்றி தெளிவான ஒருமுடிவு ஏற்படவில்லை என்றும் இந்த முடிவு ஏற்பட்டதும் அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார்கள் என்றும் தெரிவித்தார்"

# கி. வங்க அகதிகள் பிரச்னைதீர சர்வதேச உதவிகள் தேவை

## நடுநிலைமை நாடுகள் விடுத்த வேண்டுகோள்

வாஷிங்டன், ஒக் 1

இந்தியாவிலிருக்கும் 80 லட்சத்திற்கும் அதிகமான கிழக்கு வங்க அகதிகள் பிரச்னையைத் தீர்க்க சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென வாஷிங்டனில் கூடிய மண்டல சார்பற்ற நாடுகளின் பிரதிநிதிகள் உலக நாடுகளுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

வாஷிங்டனில் அவர்கள் விடுத்த அறிக்கையில் முன் எப்போதையும் விட இப்பொழுதுதான் மனித அடிப்படையில் உதவிகள் அவர்களுக்கு தேவையாக உள்ளது. இந்தியாவுக்குள் வந்திருக்கும் அகதிகள் பல வகையில் துன்புறுகின்றனர். அவர்கள் துன்பத்தைப் போக்க இந்தியாவால் மட்டும் முடியாது. இதற்கு உலக நாடுகள் உதவிபுரிய வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகள் திரும்பிச் செல்வதற்கேற்ற பாதுகாப்பு உத்தரவாதத்தை பாகிஸ்தான் அரசினர் அளித்தாலொழிய அவர்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்லமாட்டார்கள் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது இந்தியாவிலிருக்கும் அகதிகளுக்கு நாளொன்றுக்கு அளிக்கப்படவேண்டும். 3 லட்சம் குழந்தைகள் சத்துணவின்றி அபாய நிலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே 10 லட்சம் குழந்தைகள் அபாய நிலையில் உள்ளனர் என்று தெரியவருகிறது.

### உலகநாடுகளுக்கு விண்ணப்பம

கிழக்கு வங்காளத்தில் அமைதியை ஏற்படுத்தும் முதல் நடவடிக்கையாக கிழக்கு வங்காள மக்கள் தலைவர் ஷேக்முஜிபுர் ரஹ்மானையும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளையும் விடுதலை செய்து அவர்களுடன் பாகிஸ்தான் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தத் தூண்டுமாறு உலக மக்களையும் நாடுகளையும் இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. சுவரண்சிங் கேட்டுக் கொண்டுள்ளார்.

திரு. சுவரண்சிங் ஐ. நா. வில் பேசுகையிலேயே இவ் வேண்டுகோளை உலக நாடுகளுக்கு விடுத்தார்.

மேலும் அவர் அங்கு பேசுகையில் கிழக்கு வங்காளத்தில் பொருளாதார சீர்கேடு, சமூகசீர்கேடும் ஏற்பட்டுள்ளன. அவற்றை கூடியவரையில் தீர்ப்பதற்கு இந்தியா முயற்சி செய்து வருகிறது என்றார்.

### மின்சார நிலையம் தகர்ப்பு

டாக்காவுக்கு அருகேயுள்ள குஸ்திபோரா வட்டாரத்தில் இருக்கும் மின்சார நிலையத்தை விடுதலைப் படையினர் தகர்த்துள்ளதாகவும், லேரூர் இடத்தில் இரு அதிகாரிகள் உட்பட 150 பாகிஸ்தான் இராணுவத்தினரை கொன்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் படையினரின் தாக்குதலைச் சமாளிப்பதற்காக டாக்காவிலுள்ள மின்சார நிலையங்கள் ... நிலையங்கள் மற்றும் அரசாங்க அலுவலகங்கள் ஆகியவற்றை பாகிஸ்தான் இராணுவத்தினர் காவல் காத்து வருவதாகவும், அவற்றைப் பாதுகாப்பதற்காக ... மீற்றர் உயரத்தில் மின்சுவர் எழுப்பப்பட்டுள்ளதாகவும் டாக்கா வானொலி நிலையம் ஒரு கோட்டை போலக் காட்சி அளிப்பதாகவும் ... நாடு திரும்பிய ஒருவர் தெரிவித்துள்ளார்.

### மலையைக் குடைந்து சுரங்க வழிப்பாதை

துஷான்பே, ஒக் 1

கடல்மட்டத்திலிருந்து 2 1/2 கிலோமீட்டர் உயரத்தில் இன்சார் மலைத் தொடருக்கு ஊடாகச் சுரங்க வழி மோட்டார் பாதையொன்று தாஜிக்ஸ்தானில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இது பூர்த்தியானதும் வருஷம் பூராவும் - கோடையிலும் கடும் பனியிலும் மோட்டார் போக்குவரத்து சாத்தியமாகும்.

தற்பொழுது மாரிகாலத்தில் பனியாறுகள் பெருக்கெடுப்பதால் தாஜிக் குடியரசின் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் போக்குவரத்து துண்டிக்கப்படுவதுண்டு.

தாஜிக்ஸ்தானின் 93 சதவிகித பிரதேசம் மலைப் பாங்கானது. மோட்டார் வாகனங்களே பிரதான போக்குவரத்து சாதனமாகும்.

### தேசிய விழாவைபவத்தில்

## சீனப் பிரதமர் கலந்து கொள்ளவில்லை

பீக்கிங், ஒக் 1

சீனாவின் தேசிய தினத்தையொட்டி வழக்கமாக நடைபெறும் நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை. இன்று நடைபெற்ற வைபவமொன்றில் சீன உதவிப்பிரதமரும் மற்றும் சில அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

வழமையாக இவ் வைபவத்தில் கலந்துகொள்ளும் சீனப் பிரதமர் சூ-என்-லாய் மேற்படி வைபவத்தில் கலந்துகொள்ளாதது அரசியல்வட்டாரங்களில் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது.

சில நாட்களாக சீனாவின் உள்நாட்டு அரசியல்பற்றியும், தலைவர் மாவோ பற்றியும் பலவித வதந்திகள் பரவிவருவதும், இப்பொழுது பிரதமர் சூ-என்-லாய் சிறப்பு வைபவங்களில் கலந்துகொள்ளாமையும் அரசியல் வட்டாரங்களில் ஏற்பட்டுள்ள சந்தேகத்தை மேலும் வலிமைப்படுத்தியுள்ளன.

இதேநேரத்தில் கடந்த 21 ஆண்டுகளாக பீக்கிங் வானொலி சீன தேசிய தினத்தையொட்டி பீக்கிங் டெய்லி, ரெட் பிளாக், பத்திரிகைகளின் கூட்டுத்தலையங்கத்தை ஒலிபரப்பிவருவது வழக்கம். ஆனால் முதல்முறையாக இம்முறை அப்பத்திரிகைகளின் தலையங்கத்தை பீக்கிங் வானொலி ஒலிபரப்பவில்லை (4ம் பக்கம் பார்க்க)

# வட அயர்லாந்து சமரசம்: பிரதமர்கள் நம்பிக்கை

லண்டன், ஒக். 1

வட அயர்லாந்தில் அரசியல் சமரசத்தை நோக்கி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முடியும் என்று பிரிட்டிஷ், வட அயர்லாந்து, ஐரிஷ் குடியரசுப்பிரதமர்கள் மீண்டும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இரண்டு நாட்களாக நடந்த பேச்சுவார்த்தைகளின் பின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தமது பேச்சுக்களால் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பிரிட்டனின் திரு ஹீத்தும் வட அயர்லாந்தின் திரு ... ஐரிஷ் குடியரசின் திரு ... 'செக்கர்ஸ்'ஸில் கூடிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

வட அயர்லாந்தில் வன்முறையையும், அவசரகால சட்டங்களையும் காவல் சட்டங்களையும் காலதாமதமின்றி ஒழிப்பதன் அவசியத்தையும் இதற்காக இரு சமூகத்தவர்கள் மத்தியிலும் சமூக உறவை நிலைநாட்டும் வழி காண்பதன் அவசியத்தையும் பிரதமர்கள் தமது கூட்டறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்கள். வட அயர்லாந்து அரசியல் அந்தஸ்து குறித்த பிரதமர்கள் "மூவரும்" பரஸ்பரமாக ஏற்கனவே தமது நிலைமையைத் தெளிவாக்கியிருக்கிறார்கள். பிரதமர்கள் மூவரும் ஏற்கனவே கொண்டுள்ள இந்த கடமைப்பாடு பேச்சுவார்த்தைகளின்போது அங்கீகரிக்கப்பட்டது என்று கூட்டறிக்கை கூறுகிறது.

சமரஸ நடவடிக்கைகள் தொடரவேண்டுமென்று திருலின்ச் மனப்பூர்வமாக விரும்புகிறார் என்பதை பிரிட்டிஷ் பிரதமர் இப் பேச்சுக்களின்போது நன்குணர்ந்துகொண்டார் என்றும் இப்போது தெளிவாகியுள்ளது.

திரு. ஹீத்தும் திருலின்சும் தனியாக வெளியிட்டுள்ள மற்றொரு அறிக்கையில் எதிர்காலத்தில் ஆங்கிலோ-ஐரிஷ் உறவுகளைப் பாதிக்கும் விஷயங்களில் இருவரும் அடிக்கடி தொடர்பு கொள்ளவேண்டும் என்று இணக்கம் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே இங்குபோர் காலத்தில் அவர்கள் பேச்சுநடத்த இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்துக்கு

# கிழக்கு மாகாணத்தில் கிளைமடம்

யாழ்ப்பாணம், சனி

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனக் கிளைமடம் ஒன்று கிழக்கு மாகாணத்தில் அடுத்த திங்கட்கிழமை திறக்கப்படும். நல்லை ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரானிடம் பொறுப்பை வழங்கும் விழா நடைபெறும்.

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையின் தலைமையிலான குழுவினர் இந்த கிளை மடத்தை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். மட்டக்களப்பு மண்டூர் கந்தசாமி கோவிலுக்கு அருகாமையிலுள்ள செட்டிபுலம் என்ற பகுதியில் இம்மடம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆதீனகர்த்தாவுக்கு மடத்திறப்புவிழாவையொட்டிய வரவேற்புவிழாவை 3-ம் திகதி நடத்தவுள்ளனர் என்று ஆதீனகர்த்தா ஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் தெரிவித்தார்.

# "வாணிவிழாவின் தத்துவம்"

யாழ்ப்பாணம், சனி

"தமிழ்ச் சமுதாயம் தொன்றுதொட்டு அறிவுக்கு முதலிடங்கொடுத்து வாழ்ந்துவருகின்றது. அறிவுடையார் எல்லாம் உடையார் என்ற தத்துவக் கருத்தையே அடிப்படையாக வைத்து வாழ்ந்து வருகிறது. கல்வியின் முதிர்ச்சியால் அறிவுடைமை உண்டாகின்றது. அறிவிலிருந்து ஆசாரம் உருவாகின்றது; ஆசாரத்தின் வளர்ச்சியே நற்பழக்க வழக்கங்களாகும். அந்த நற்பண்புகளை விருத்தி செய்யும் கலைக்கோயில்களே கல்விநிலையங்கள். இந்தத் தத்துவ அடிப்படையிலேயே கலைத்தெய்வமாகிய கலைமகளுக்கு ஆண்டுக்கொருமுறை வாணிவிழாக் கொண்டாடி அனுதினமும் வழிபடுகின்றோம்."

இவ்வாறு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்ற வாணிவிழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய வித்துவான் க. ந. வேலன் குறிப்பிட்டார்.

விழாவிற்கு கல்லூரி முதல்வர் திரு சி. வி. சண்முகநாதன் தலைமைதாங்கினார். திரு வ. உமாபதிசிவம் வரவேற்புரை நிகழ்த்தினார். பண்டிதர் திரு. சி. சுப்பிரமணியனின் விசேஷ சொற்பொழிவு ஆகியன இடம்பெற்றன.

0 0 0

## 'வீரம் பிறக்க வேண்டும்'

யாழ்ப்பாணம், சனி

இளைஞர்களிடையே கோழைத்தனம்மாறி வீரம் பிறக்கவேண்டும். எதுவரினும் பொருதுமனம் கொண்டு இலட்சியத்தைக் கொண்டு நடக்கும் சமுதாயத்துக்கு நன்மை பயக்கும் வண்ணம் வாழவேண்டும்"

இவ்வாறு பண்ணாகம் ஸ்ரீ முருகன் சனசமூகசேவா நிலையச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட கலைமகள் விழாவில் பேசுகையில் வட்டுக்கோட்டை முன்னாள் எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். திரு. க. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. ப. இராசகுரு, க. மயில்வாகனம், கு. வி. மாசிலாமணி ஆகியோரது சொற்பொழிவுகளும் இன்னிசையும் இடம்பெற்றன. (கு.வி.ம)

0 0 0

## 'எந்தச் சமயத்தவரும் போற்றவேண்டும்'

யாழ்ப்பாணம், சனி

குழந்தைகள் உள்ளம் படிகம் போன்றது. அந்தத் தூயஉள்ளத்திலே மாசுக்கள் படியாமல் இருப்பதற்காக கலைமகளைத் துதித்தல் வேண்டும். அக்கலைமகளையே தமிழர்கள் வெள்ளைக்கலையுடுத்து வெள்ளைப்பணிபூண்டு வெள்ளைக்கமலத்து வீற்றிருப்பவளாகக் கண்டார்கள். அதில்கூடப் பல தத்துவங்களை வைத்துள்ளார்கள். எந்தச்சமயத்தவராகஇருந்தாலும் இந்தத் தத்துவத்தைப் போற்றவேண்டும்.

இவ்வாறு ஈழத்தின் பிரபல எழுத்தாளரும் இலங்கைச்சாகித்திய மண்டலத்து இலக்கியக்குழு உறுப்பினருமாகிய மூதூர் வ அ இராசரத்தினம் குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலயத்தில் நடைபெற்ற கலைமகள் விழாவின் போது குறிப்பிட்டார்.

இரசிகமணி கனகசெந்திநாதன் தலைமையில் விழா நடைபெற்றது.

0 0 0

பொலிகண்டி சைவமகா வித்தியாலயத்தில் அதிபர் சி. இராமநாதர் தலைமையில் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது பண்ணிசைச்செல்விகள் மோகாம்பாள் மங்களாம்பாள் ஆகியோரின் இன்னிசையிருந்து இசைமணி வார்த்திகேசனின் சம்பனும் கலைவாணியும் என்னும் இசைக்கதைச் சொற்பொழிவு வித்துவான்

## சக்தி வழிபாட்டால் சகலதும் பெறலாம்

சித்தன்கேணி, வெள்ளி

'பண்டைக் காலந் தொட்டு சக்தி வழிபாடு சைவமக்களால் பக்தி சிரத்தையுடன் அனுஷ்டிக்கப்பட்டு வருவதை நற்பல ஆராய்ச்சிகள் மூலம் அறிகின்றோம். சக்தி வழிபாட்டின் மூலம் ஒருவர் தமக்கு இன்றியமையாத தேவைகளான வீரம், செல்வம், கல்வி முதலியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். சக்தியை வழிபடும்போது தூய்மையான உள்ளம் படைத்தவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் கலைச்செல்வியின் அருள் அதிகம்.

இவ்வாறு சித்தன்கேணி சிவச்செல்வி இந்துசமய மன்றத்தினர் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் மன்றத்தலைவர் திரு வ. உமாபதிசிவம் தலைமையில் நடைபெற்ற கலைமகள் விழாவின் சந்திப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு மு. பாலசுப்பிரமணியம் சொற்பொழிவாற்றும்போது கூறினார்.

தலைவர் தமது உரையில் "ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் எமக்கு அருள்பவள் கலைவாணி. கலைவாணி எல்லாப் பேறுகளையும் தருவாள். அவளை உள்ளன்போடு வழிபடுவதற்கும் அவளுக்கு நன்றி செலுத்துவதற்கும் இவ்விழாவை நமது பண்டைய தமிழ் மக்கள் ஏற்படுத்தியுள்ளார்கள்" என்று கூறினார்.

யாழ் மத்திய கல்லூரி ஆசிரியர் திரு ஆ சதாசிவம் பேசும்போது "பெண்மையைப் போற்றும் சமயம் சைவசமயம். பெண்ணின்றி எதையும் பெறமுடியாது என்பதை எடுத்துக் காட்டவே இவ்விழா எழுந்தது. சிவனையும் சக்தியையும் பிரிக்கமுடியாது என்பதை நாம் அறிவோம் என்று குறிப்பிட்டார்.

யாழ். பெரியாஸ்பத்திரியில்

# பல லட்சம் ரூபா செலவில் வெளிநோயாளர்சிகிச்சைநிலையம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் அமைக்க அரசாங்கம் 20 லட்சம் ரூபா வழங்கும். இத்தகவலை இங்கு விஜயம்செய்த சுகாதார அமைச்சர் திரு. டபிள்யு பி. ஜி. ஆரியதாசா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் நடைபெற்ற ஆஸ்பத்திரிக் கமிட்டிக் கூட்டத்தில் அமைச்சர் கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் தெரிவித்ததாவது.

அரசாங்க நன்கொடைக்கு மேலாக வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் கட்டிமுடிக்கத் தேவைப்படும் செலவைப் பொதுமக்களே பொறுக்கவேண்டும். அரசாங்கத்தின் நிதிநிலைமை மோசமாயிருப்பதால் மேலதிக நிதியைப் பொதுமக்களிடமிருந்தே பெறவேண்டும். இலங்கையிலுள்ள ஆஸ்பத்திரிகளில் தரமான ஆஸ்பத்திரியாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி திகழுவதை இன்று நான் காணக்கூடியதாயிருந்தது. இந்த ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் சகலரும் பொறுப்புணர்வோடு கடமையாற்றுவதையிட்டுப் பெருமையடைகின்றேன். இங்கு நிலவும் இடநெருக்கடியைத் தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பேன்.

டாக்டர் பிலிப் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பேசிய உறுப்பினர்கள் பலரும் வடபகுதியில் புற்றுநோயாளர் படும் துன்பங்களை எடுத்துக் கூறினர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள புற்றுநோயாளர்கள் சிகிச்சைக்காக மகரகம செல்லும்போது அவர்கள் குடும்பத்தினரும் செல்லவேண்டியுள்ளதால் யாழ்ப்பாணத்தில் உடனடியாகப் புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைக்க வேண்டுமெனவும், டாக்டர்கள் பற்றாக்குறையும் எழுதுவினைஞர் பற்றாக்குறையும், சுருக்கெழுத்தாளர் பற்றாக்குறையும் நிலவுவதால் உடனடியாக அந்த இடங்கள் நிரப்பப்பட வேண்டுமெனவும், யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் முப்பது தாதிகளின் இடம் நிரப்பப்படாமல் இருப்பதால் உடனடியாக அந்த இடங்களும் நிரப்பப்பட வேண்டுமெனவும் திரு லோகேஸ்வரன் கேட்டுக்கொண்டார்.

இணுவில், மானிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள தனியார் ஆஸ்பத்திரிகளை அரசாங்கம் தேசியமயமாக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென திரு. இராசையா என்பவர் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீலங்கா சுகாதார கனிஷ்ட தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை சுகாதார அமைச்சரிடம் கையளித்தனர்.

## பெ. ஆ. சங்கம்

யாழ்ப்பாணம், சனி

கோண்டாவில் சி. சி. த. க. பாடசாலைப் பெற்றோர் ஆசிரியசங்கக் கூட்டம் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. திரு. க. இராசையா, திரு. செல்லத்துரை, திரு நடராசா, திரு. முத்துத்தம்பி, திரு. சதாசிவம் ஆகியோர் உரையாற்றினர். நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவில் தலைவராக கல்லூரி அதிபரும், உபதலைவராக திரு. க. இராசையாவும், காரியதரிசியாக திரு. நா. சி. நடராசாவும், உபகாரியதரிசியாக திரு. ஆ. செல்லத்துரையும் தனாதிகாரியாக திரு. செ. முத்துத்தம்பியும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

## நிரந்தரக்கட்டிடம் அமைக்கப்படும்

சங்கானை, வெள்ளி

நிற்சாமம் சரஸ்வதி சனசமூக நிலையத்தாரின் வருடாந்தக் கூட்டத்தில் சனசமூக நிலையத்திற்கு பத்தாயிரம் ரூபா பெறுமதியான நிரந்தர கட்டிடம் ஒன்று அமைக்கவேண்டும் என்ற பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு அதற்கான ஆக்க முயற்சிகள் புதிய நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் எம். கணேஸ், காரியதரிசி எஸ். செல்வரத்தினம், தனாதிகாரி என். பென்னுத்துரை, உபகுழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

## விஞ்ஞான ஆய்வுகூடம்

சங்கானை, வெள்ளி

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிட வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கான பிள்ளைகள் பல மைல் தூரத்திற்கப்பால் உள்ள கல்லூரிகளுக்கு விஞ்ஞானக் கல்விக்காகப் போக வேண்டிய கஷ்டநிலை தவிர்ப்பதற்கு ஏதுவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மகாவித்தியாலயத்தில் இதுவரை நிலவிவந்த தளபாடத் தட்டுப்பாடும் பெற்றோர் ஆசிரியர்சங்க முயற்சியாலும் அண்மையில் வடமாநில கல்வி அதிகாரி நேரில் இங்கு வந்து பார்வையிட்டதைத் தொடர்ந்து தளபாடங்கள் கல்வி இலாகாவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## மேயரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

காதர் அவுபக்கர் வீதிச் சந்தியில் இருக்கும் தேநீர்ச் சாலைக்கு அருகாமையில் இருக்கும் மதகுகளையும் கான்களையும் நாவாந்துறை மீன் மார்க்கட்டுகளுக்கு அருகாமையில் இருக்கும் இறைச்சிக் கடைப் பின்புறங்களையும் 1-ம் ஒழுங்கையையும் எவ்வளவேனும் சுகாதார முறையற்றதாய் கருதப்படும். மற்ற இடங்களையும் மேயர் பார்வையிட்டுடன் நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணம் மாநகரசபை மேயர் திரு. அல்பிரட்துரையப்பாவை நாவாந்துறையைச் சேர்ந்த ஒருவர் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 'வங்க மக்களுக்கு உதவுக'

— பாப்பரசர்

வத்திக்கான், ஒக் 1

கிழக்குப் பாகிஸ்தான் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும்படி அவசர வேண்டுகோள் ஒன்றை பரிசுத்த பாப்பரசர் 6-வது சின்னப்பர் விடுத்துள்ள வேண்டுகோளையடுத்து உலகெங்கும் உள்ள கத்தோலிக்க நிவாரண ஸ்தாபனங்கள் ஒருங்கிணைந்து உதவி செய்ய முன்வந்திருப்பதாகத் தெரிகிறது.

சுவிட்சலாந்தைச் சேர்ந்த வண பிதா ஹென்றிச்மக்டன் தலைமையில் உள்ளகுழு இவ்வுதவி வழங்குவதற்கான வேலைகளைக் கவனித்து வருகிறது.

## அரசாங்க தமிழ் தட்டெழுத்தாளர் சங்கம்

கோட்டை, வெள்ளி

தற்சமயம் அரசாங்க சேவையில் நாட்சம்பளம் நிலையிலும் தற்காலிக ஊழியராயும் உள்ள சகல தமிழ்த் தட்டெழுத்தாளர்களையும் அரசாங்க தமிழ்த் தட்டெழுத்தாளர் சங்கத்தில் சேர்த்துக் கொள்வதென கடந்தவார இறுதியில் மட்டக்களப்பில் கூட்டப்பட்ட ஐந்தாவது ஆண்டுவிழாவில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டுக்கூட்டத்தில், எழுதுவினைஞர் பதவியில் தட்டெழுத்தாளர் சேவையை இணைத்தல் பற்றியும் ஆராயப்பட்டது.

கிழமையில் ஐந்து நாட்கள் வேலைபற்றி பொதுநிர்வாகத் திணைக்களத்தின் முடிவையும் சபை ஏற்றுக்கொண்டது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தேர்வுபெற்றனர்: தலைவர் திரு ஞ பரமகுரு, உபதலைவர்கள்: திரு. எஸ். பொன்னம்பலம். திரு. வை ஆ சர்மா, செயலாளர்: திரு ஆ ஆனந்தராசா. உபசெயலாளர்: திரு பால சுப்பிரமணியம், பொருளாளர் திரு வே சிவலிங்கம். கணக்காய்வாளர்: திரு கோபாக்கியராசா.

பிரதேச தொடர்பு உத்தியோகத்தர்களாகதிருவாளர்கள்: மு மயில்வாகனம், எஸ் பேரம்பலம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். 9 பேர்கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## வீணாகிறது

யாழ்ப்பாணம், சனி

சிறுபோக வேளாண்மைக்கு நீர்ப்பாய்ச்சிஎஞ்சிய நீர் வீணே கடலில் பாய்கிறது. இதுசுமார் 100முதல் 200 ஏக்கர் வயல்நிலத்திற்குப் பாசனம் செய்யக் கூடியது என அறியப்படுகிறது. கிளிநொச்சிப்பகுதியில் இரணைமடுக் குளத்திலிருந்தே இவ்வாறு நீர் விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படாது. வீணாவதாகக் கூறப்படுகிறது.

## சீனப் பிரதமர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சீனாவின் அண்மைக்காலக் கொள்கை, வெளிநாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுகளிடையே பிரிவினையை ஏற்படுத்துவதோடு சோவியத் விஷயங்களிலும் தலையிடுவதாகும் என்று சோவியத் பத்திரிகை கண்டித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உண்மையான அன்பை வாய்ச்சொல் வெளிப்படுத்தாது. சேவைதான் வெளிப்படுத்தும்.

—காந்தியடிகள்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

... விரோதிகிருது வருஷம் புரட்டாதி மாதம் 16 திகதி (2-10-71)

## காந்திய சோஷலிஸம்

இன்று மகாத்மா காந்தி அவதரித்த புனித நாள். இலங்கையுள்ளிட்டு பல ஆசிய, ஆபிரிக்க நாட்டுமக்கள் இப்போது அரசியல் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றிருக்கின்றனரெனில், அதற்கு மகாத்மா செய்த தவமும் தியாகமும், அஹிம்ஸா முறையில் அவர் நடத்திய பல போராட்டங்களும்காரணமென்பதை நன்றியுடன் பலரும் போற்றுகின்றார்கள்.

அரசியல் விடுதலையைப் பெற்றுள்ளும் நாம் இன்னும் பொருளாதார விடுதலையைப் பெறவில்லை. நம்மிடையே பல ஏற்றத் தாழ்வுகள் உள்ளன. ஏழ்மையெனும் பிணி நீங்கவில்லை. வேலையில்லாக் கஷ்டம் ஒருபுறம், முதலாளி-தொழிலாளி பிணக்குகள், சாதிப் பிரச்னைகள், வகுப்புவாதங்கள் முதலியன நம்மைத் திகைக்கவைக்கின்றன. அவர் பிறந்த இந்தியாவிலே இன்றுள்ள நிலைமையையும், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 90 லட்சம் பேருக்குமேல் இந்தியாவுக்கு அகதிகளாக வந்துள்ளதையும், அதிகரிக்கும் பலாத்கார சம்பவங்களையும்பார்க்கையில், அரசியல் விடுதலைக்குப் பின், பல்வேறான புதிய புதிய பிரச்னைகளைச் சமாளிக்கவேண்டியிருப்பது விளங்கும்.


இப்புதியபுதிய பிரச்னைகளை எப்படித் தீர்ப்பது? சோஷலிஸம்வந்தால் இக்கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்துவிடுமென்று பொதுவாகப் பலரும் கூறுகின்றார்கள். எல்லாக் கட்சியினரும் தங்களை 'சோஷலிஸ்ட்' (சமதர்மவாதிகள்) என்றே சொல்லிக்கொள்கின்றார்கள். "சோஷலிஸம்" என்றால் என்ன? மேலான இலட்சியமான இந்தசோஷலிஸத்தைஎப்படிப்பெறுவது? பார்லிமெண்ட் ஜனநாயக வழியா? அல்லது பலாத்காரப்புரட்சிப்பாதையா? எல்லாத் தொழில்களையும் வர்த்தகத்தையும்தனியாரிடமிருந்து பறித்து, அரசாங்கஅதிகாரிகளிடம்ஒப்படைப்பதுதான் சோஷலிஸமா? என்பன போன்ற பலகேள்விகள்எழுந்து பலரையும் திகைக்க வைக்கின்றன.

அரசியல் விடுதலையைப் பெற்றுத்தர உதவிய மகாத்மாகாந்தி அவர்களும், 'சோஷலிஸத்தை' ஆதரிக்கிறார். ஆனால் அவர் கூறும் 'சோஷலிஸம்' எப்படிப்பட்டது? அவரே கூறுவதைப் பார்ப்போம். "சோஷலிசத்தில் சத்தியமும் அஹிம்சையும்பிறக்க வேண்டும். அப்படியாயின் சோஷலிஸ்டுகளுக்கு உண்மையான தெய்வ நம்பிக்கை இருத்தல் அவசியம். கடவுள் என்றுக் அன்பு. சத்தியம். அதன் சக்தி மகத்தானது. நமக்குள்ளேயே அச்சக்தியுள்ளது. அதை மறப்பவர்கள் தம்மிடமுள்ள எடுக்க எடுக்கக் குறையாத சக்தியைப் பயன்படுத்தாதுடன், சக்தியற்றவராகவும் ஆகிறார். சுக்கான் இல்லாத கப்பல் போல் அவர் வாழ்க்கை தத்தளித்து நாசமாகும். அப்பேர்ப்பட்டவரின் 'சோஷலிஸம்' என்ன பயனைத் தரும்? மாசற்ற மனமும் சத்தியமும் அஹிம்சையுமுள்ளவர்களாலேயே இந்தியாவிலும் உலகிலும் சோஷலிஸ சமுதாயத்தை ஏற்படுத்த முடியும். இப்படிப் பார்த்தால் உலகில் எந்த நாட்டிலும் உண்மையான சோஷலிஸமில்லை என்றே கூற வேண்டும். மேற்குறித்த முறைகளாலல்லாமல் சமதர்ம சமுதாயம் ஏற்படுவது அசாத்தியம் என்று அறிவுறுத்துகிறார் அவர்.

எல்லா மக்களும்சரி சமானமாக வாழவேண்டுமென்றும் சமூகத்தில் தனிப்பட்ட ஒருவரின் தன்மையையும் கவனிக்க வேண்டுமென்பதேசோஷலிஸ ஜனநாயகத்தின் மேலான இலட்சியமாகும். துரதிருஷ்டவசமாக பலாத்காரத்தால் இதை ஏற்படுத்த முடியுமென்று பலர் கருதுகிறார்கள். பலாத்காரப்பாதை அன்பற்றது. இம்சையானது. இதனால் நிரந்தரமான நல்ல பயன் கிடைக்க முடியாதென்றும் அன்பு வழியே உண்மையான சோஷலிஸத்துக்கு வழிவகுக்குமென்றும் அரசியல் விடுதலை வாங்கித்தந்த மகாத்மா அறிவுறுத்துகின்றார். அவர் மறைந்தபின் அவர்கூறிய யோசனைகளையும் படிப்படியாக இந்தியாவிலும் மறந்துவிட்டார்கள். அதனால்தான் இன்றைய சங்கடமெல்லாம். அவர் பிறந்த புனிதமான இந்நாளில் அவர் பொருளாதார விடுதலைக்குக் கூறியுள்ள நல்ல மார்க்கத்தை சிறப்பாக நம்வாலிபர்களும் அரசியல் தலைவர்களும் சற்றே சிந்தித்து அவ்வழியில் காரியங்கள் செய்தால் உண்மையான பலமான சோஷலிஸம் நாட்டில் ஏற்படவும் இன்று தலையிடி கொடுக்கும் பிரச்னைகளெல்லாம் வெகுவாகத் தீரவும் வழிபிறக்கும்.

# சாந்தமே உருவான காந்தி

**இன்று காந்திஜயந்தி. சாந்தமே உருவான காந்தி பற்றி அறிஞர் ரெமெயின் ரொலாண்ட் எழுதிய நூலில் இருந்து ஒருபகுதி சுருக்கமாகத் தரப்படுகிறது.**



அன்பு சாந்தம் அமைதி கருணை என்னும் அரும் பெரும் பண்புகளுக்கு இருப்பிடமான காந்தி சிறுபிள்ளை போல் கள்ளங்கபடமற்ற உள்ளம் கொண்டவர். தன் பகைவன் மட்டிலும் மரியாதையாகவும், சாந்தமாகவும் பழகும் சிறப்பம்சம் இவரிடம் என்றும் நிலவியது. குறைவற்ற அன்புக்கும் முடிவற்ற பொறுமைக்கும் இருப்பிடமானவரெனப் பலலோராலும் போற்றிப் பாராட்டப்பெற்றவராவார். இத்தகைய சிறப்பம்சம் வாய்ந்த மனிதருள் மாணிக்கமெனப் போற்றப்படும் இப்பெரியார் வண. பிரான்சிஸ் அஸிஸி என்பவருடன் ஒப்பிடப்படுகின்றார். காந்திமகானை தென்னாபிரிக்காவில் சந்தித்த திரு. டபிள்யூ டபிள்யூ பிரசன் என்பவர்தான் கண்ட காந்தியைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

பலவீனமான மெலிந்த மேனி ஒட்டி உலர்ந்த முகத்தில் இரு பெரிய கருவிழிகள். வெண்ணிற ஆடையினுள் போர்த்தப்பட்ட உடம்பு. பாதரக்ஷை எதுவுமற்ற கால்கள். சிறிய வெண்ணிற தொப்பி தலையை அலங்கரிக்க ஆடம்பரம் எதுவுமின்றி எளிமையே உருவான மெலிந்த உருவமே காந்தி.

அருளுக்கு இருப்பிடமான காந்திஜியின் வாழ்க்கையோ ஆடம்பரம் எதுவுமற்றது. தவறு செய்யும்போது அதை மூடிமறைக்கவோ மறுக்கவோ முற்படுவதில்லை. செய்த தவறை ஒப்புக்கொள்ளப் பின்னிற்பதுமில்லை இவர். பெயர் பெற்ற ஒரு ராஜதந்திரியோ, திறமைவாய்ந்த பேச்சாளரோ அல்ல. இவ்வாறு தான் திகழவேண்டுமென எண்ணியதுமில்லை. தான் கடைப்பிடித்த நேர்மையான கொள்கையிலிருந்தும் இவற்றை நடைமுறையில் செய்துகாட்டி நிரூபித்தமையினாலும் மிகவும் கீர்த்திபெற்றார் எனலாம். இச்சிறப்பம்சத்துக்கு இருப்பிடமான இவரே வேறுயாரும் மதிப்புக்கும் உள்ளானார். இருபான்மையினரது கவலைகளை நீக்கி ஆறுதலளிப்பதிலும் அவர்களது குறைகளை நீக்கி உரையாடும் போதுமே உண்மை இன்பம் கண்டார்.

மிகச் சக்திவாய்ந்த பிரித்தானிய அரசின் வலிமையை ஆட்டம் கொள்ளச்செய்தும் தெய்வ வழிபாட்டின் சக்தியை எடுத்தியம்பி முக்கியம் பெறச்செய்தவர் இப்பெரியாரவர்.

# புரட்சிக்கவிஞரா? மரபுக்கவிஞரா?

வவுனியாவிலிருந்து ஓர் அன்பர் எழுதுவதாவது:-

சென்றமாதம் யாழ்ப்பாணத்தில் மிக சுகயீனமாக ஆஸ்பத்திரியில் இருந்தேன். என் தேகநிலைபற்றி கொழும்பிலுள்ள என்நண்பர் ஒருவருக்கு 18-ந் திகதி ஒரு கடிதம் எழுதினேன். அக்கடிதம் அவருக்கு 27-ந் திகதி தான் கிடைத்துள்ளது.

"சாதாரணமாக 19-ந் திகதி கிடைக்க வேண்டிய கடிதம், 9 நாட்கள் தாமதித்து கிடைத்துள்ளது. என் நண்பர் அந்தக் கடித உறையை அப்படியே அனுப்பியுள்ளார். அதை உங்கள் பார்வைக்கு அனுப்பியுள்ளேன். கொழும்பு தபாலாபீஸ் முத்திரையில் "23 ஆகஸ்ட்" என்று இருப்பதைப் பார்க்கலாம். விலாசம் தமிழில் எழுதப்பட்டதால்தானோ இந்தத் தாமதம்? அல்லது இந்தத் தாமதத்துக்கு வேறென்ன காரணம்? இந்தத் தாமதத்தைக் குறைக்கவும் உடனுக்குடன் தபால்கள் சேரவும் எதுவும் செய்ய முடியாதா?" என்று எழுதியுள்ளார்.

இப்புகாரை போஸ்ட்மாஸ்டர் ஜெனரலுக்கும், தபால் அமைச்சருக்கும் செய்து தாமதத்திற்கான காரணத்தைக் கேட்டால் அவர்கள் விசாரித்து பதில் எழுதுவர். தபால்பட்டுவாடா செய்யும் சிப்பந்திகளுக்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் இம்மூன்றும் தெரிந்திருக்கவேண்டும். சிங்களம் மட்டும் தெரிந்திருந்தால் இக்கடமையைச் சரிவரச் செய்ய முடியாது. தமிழில் விலாசம் எழுதியதால்தான் இத்தாமதமா? ஆங்கிலத்தில் முகவரி எழுதினால் உடனுக்குடன் சேருகிறதா? இது மிகமுக்கியமான விஷயம். இதைப்பற்றி மேலதிகாரிகள் விசாரித்து, இவ்விதபுகார்களுக்கு இடமின்றி செய்வதுடன், தமிழ் பேசும் மக்களின் சங்கடத்தையும் தீர்க்க வேண்டும். தமிழ் எம்.பி மார்களும் இதுபற்றி கவனம் செலுத்தி கேள்வி கேட்பது நல்லது.

0 0

திருவள்ளுவர் மரபுவழிக் கவிஞரா? அல்லது புரட்சிக் கவிஞரா? இதுபற்றிய ஒரு கருத்தரங்கு புதுக்கோட்டையில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் தலைமையில் நடைபெற்றுள்ளது. இதன் தொகுப்பை திருச்சி வானொலி மூலம் சிறிது கேட்டேன். இருதரப்பிலும் பலர் பங்குபற்றி உணர்ச்சியுடன் காரசாரமாகப் பேசினர். பழைய மரபுகளை மதித்தாலும், திருவள்ளுவர் புரட்சிக் கவிஞரே என்று முடிவு கூறினார் அடிகளார்.

தெய்வப்புலமை வள்ளுவனார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இருந்தவர். அன்று பாடியவை, இன்றும்

### ஐயாறன் எழுதுவது

என்றும் பயன் தந்து, உலகத்தோருக்கு வாழும் வழியைக் காட்டுகின்றது. அவை அருள் வாக்குகளானவையால் சிரஞ்சீவியானவை.

புரட்சி என்பது என்ன? வெடிகுண்டு, துப்பாக்கிகளால் நமக்கு வேண்டாதவரைச் சுட்டு வீழ்த்துவதன் மூலம் புரட்சியை ஏற்படுத்த முடியுமென்று இன்றைய வாலிபரில் பலர் கூறக்கூடும். ஆனால் வள்ளுவனார் அப்படிக் கூறவில்லை. "இன்னா செய்தாரைக் ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்று கூறி அன்பின் மூலம் உலகைத் திருத்தலாமென்கிறார். எதிராளியைக் கொல்வதைவிட அன்பினால் அவரை நண்பராக்கிவிட்டால் அது எவ்வளவு மேலாகும்?

புரட்சி என்பது மாற்றம். மாற்றம்தான் உலக இயற்கை. வேகமாகச் சுழன்றுவரும் காலச் சக்கரத்திலே எவ்வளவு மாறுதல் ஏற்படுகின்றன! எவ்வளவு புரட்சிகள்! இப்புரட்சிகளெல்லாம் வளர்ச்சிக்கான அறிகுறிதானே!

... வாழ்க்கை முதல் அதிகாரத்தில் வைத்துப் பாடிய வள்ளுவனார் "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்துகெடுக உலகியற்றியான்" என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறுகிறார். தெய்வ நம்பிக்கை உண்மையில் உள்ளவர்களுக்கு அந்தத் தெய்வமே நல்ல மனமுண்டாகும்படி செய்யும். புரட்சியாளர்களுக்கும் நல்ல மனம் அவசியம். செய்யும் புரட்சியை தமக்கும் பிறருக்கும் ஆபத்தில்லாதபடி நல்ல முறையில் செய்யவே வழிகாட்டியுள்ளார் திருவள்ளுவப் பெருந்தகை. அவர் கூறியபடி எல்லாரும் சிறப்பாகத் தமிழரும் நடந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! எவ்வளவு நல்ல புரட்சிஏற்படும்!

திருவள்ளுவரைப் போற்றுகிறோம். திருக்குறளை மனப்பாடம் செய்கிறோம். ஆனால் அதில் கூறியுள்ளபடி நடக்கிறோமா? முடியவில்லையே நடந்துவிட்டால் நமக்குப் பிரச்னை இல்லை. அப்படி நம்மை நடக்கச் செய்வதும் இறைவன் அருளேயல்லவா?

---

## பட்டர் விலை அதிகரிப்பு

கோட்டை, வெள்ளி பட்டரின் விலை றாத்தல் ரூபா 5-60 சதமாக உயர்ந்துள்ளது. இலங்கையின் முழுத்தேவையைப் பூர்த்தி செய்வதற்கான பட்டரை அவுஸ்திரேலியாவே விநியோகித்தது. ஆனால் கடந்த ஏப்ரல் மாதம் முதல் அவுஸ்திரேலிய பட்டரின் விலையை 34 சதவிகிதமாக அதிகரித்ததைத் தொடர்ந்து இவ்விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. விநியோகத்திற்கு வேண்டியளவு பட்டர் கையிருப்பில் இருப்பதினால் பட்டர் தட்டுப்பாடு ஏற்படக் காரணமில்லை என அரசாங்கத் தகவல் பகுதி வட்டாரம் தெரிவிக்கிறது.

---

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" க்காக ... யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்று வழக்கம்பரையில் தியாகிகள் நினைவுவிழா

சுழிபுரம், சனி

இன்றுமாலை அண்ணாகலா மன்றத்தினர் தமது இரண்டாவது ஆண்டுவிழாவையும் தியாகிகள் நினைவுவிழாவையும் வழக்கம்பரை அம்மன்கோவில் வீதியில் கொண்டாடவுள்ளனர். மன்றத் தலைவர் பண்டிதர் ம இராஜகுரு தலைமையில் நிகழும் இவ்விழாவில் பிரதம பேச்சாளர்களாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு எம்.எஸ். செல்லச்சாமி, மட்டக்களப்பு எம்.பி. திரு செ. இராசதுரை, வவுனியா எம்.பி. எக்ஸ்.எம். செல்லத்தம்பு, கோப்பாய் எம்.பி. திருநாவுக்கரசு, ... கவிஞர் காசி ஆனந்தன், திரு அ. அமிர்தலிங்கம், புலவர் மு ... இருதரவுக்கரசு ... ஆகியோர் ... இரு நாடகங்களும்மேடையேற்றப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org